1995 ஏப்ரல் 19]

செய்யப்படுகிறது. ஆகவேதான் நெசவாளர் சங்கங்கள் நல்ல விற்பனையாகக் கூடிய நல்ல டிசைன்களில், நல்ல வண்ணச் சேலைகளை உற்பத்தி செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அந்த வகையில் உற்பத்தி செய்தால் 10 தினங்களுக்குள்ளேகூட பட்டுவாடா செய்துவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 353, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

353—

சேலம் கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்துதல்

***45614**—திரு. கே. கந்தசாமி :*

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் கூட்டுறவு நூற்பாலை விரிவுபடுத்தப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) ஆகவே இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், கூட்டுறவினுடைய 'மெக்கா' என்று சொல்லப்படுவது வழக்கம். அந்த வகையில் சேலம் கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்த வேண்டும் என பல ஆண்டுகளாகக் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று சொன்னார்கள். அவர்கள் மீண்டும் அதைப் பரிசீலனை செய்து, அந்தக் கூட்டுறவு நூற்பாலையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுகாலமாக இதற்குக் கோரிக்கை விடப்பட்டிருக்க முடியாது என்று நான் கருதுகிறேன். காரணம், 1964-ல் 1232 கதிர்களோடு அந்த நூற்பாலை செயல்படத் தொடங்கியது. அதற்குப் பின்னால் 1967-ல் 1760 கதிர்களாக விரிவுபடுத்தப்பட்டது. 1977-ல் 11,000 கதிர்களாக விரிவுபடுத்தப்பட்டது. அதற்குப் பின்னாலே 1986-ல் 19,000 கதிர்களாக விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது.

1989-லே 5,184 கதிர்கள் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை விரிவுபடுத்தப்பட்டுக் கொண்டே வந்திருக்கிறது. தற்சமயம் அந்த நூற்பாலை 49,960 கதிர்களோடு இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு மேலே விரிவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் கூட்டுறவு நூற்பாலை இலாபத்தில் இயங்குகிறதா அல்லது நட்டத்தில் இயங்குகிறதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, தனியார் நூற்பாலைகளில் நூல்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுபோல, இந்த நூற்பாலையிலிருந்து ஏற்றுமதி செய்ய அரசு முன்வருமா என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நூற்பாலைகள் பொதுமக்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. நெசவாளர்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், இந்த நூற்பாலையில் உற்பத்தி செய்யப்படுகின்ற நூல்கள் முழுக்க முழுக்க நெசவாளர்களுக்கே தரப்பட வேண்டுமென்று உத்தரவிட்ட காரணத்தினால் வேறு யாருக்கும் தருவதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய நெசவாளர்களுக்குக் கொடுத்தது போக மீதம் இருந்தால் ஏற்றுமதி செய்வது பற்றிப் பரிசீலிக்கலாம். இப்போது, சேலம் நூற்பாலை ஒரு கோடியே நாற்பத்தைந்து இலட்சம் ரூபாய் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 354, டாக்டர் பிட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

354—

ALLOWING MALE PROFESSORS TO TEACH IN GOVERNMENT WOMEN'S COLLEGES

*** 22870— Dr. BEATRIX D' SOUZA:**

Will the Hon. the Minister for Education be pleased to state—

(a) whether the Government propose to allow Male Professors to teach in Government Women's Colleges ?